**Starting time 01.20 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 20/2009**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 02.09.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | :முத்துசாமி | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :** வாதிகள் இருவரும் எனது உடன் பிந்த சகோதரர்கள் என்றால், சரியல்ல, அவர்கள் இருவரும் தான் சகோதரர்கள். நான் பக்கத்து காட்டுக்காரர். வாதிகளின் கிரய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால், இல்லை, நான் அவர்களுக்கு சொத்தும் விற்கவில்லை. வழக்கு சொத்தின் புல எண் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால், எனக்கு மனப்பாடமாக தெரியாது.

2. வழக்கு சொத்தின் பட்டா எனது பெயரில் கூட்டாக வருகிறதா என்றால், இல்லை. வழக்கு சொத்தின் புல எண்கள் எந்தெந்த தேதியில் கிரயமானது என்று எனக்கு தெரியுமா என்றால், மற்றவர்கள் குறித்து தெரியாது வாதிகள் குறித்து தெரியும். பச்சமுத்து கிரயம் வாங்கியது குறித்து தெரியுமா என்றால், தெரியும். எவ்வளவு சொத்து கிரயம் வாங்கினார் என்றால், 2.51 ஏக். அந்த புல எண்ணில் மொத்தே ம 2 ஏக்கர் 51 செண்ட் என்றாலும், மொத்தத்தையும் பச்சமுத்துவே கிரயம் வாங்கிவிட்டார் என்றால், ஆமாம்.

3. பச்சமுத்து யாரிடமிருந்து கிரயமாக வாங்கினார் என்றால், ஜெயராமனிடம் இருந்து வாங்கினார். மொத்த நிலத்தையும் பச்சமுத்துவிற்கு கிரயம் செய்து கொடுத்துவிட்டதால் ஜெயராமனுக்கு அடிநிலத்தில் உரிமை இல்லை என்றால், ஒரு பகுதியை விற்றுள்ளார், மீதி நிலம் வைத்துள்ளார். மீதி நிலம் எந்த புல எண்ணில் உள்ளது என்றால், ஞாபகம் இல்லை, எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். மீதி நிலம் தற்போது யாரிடம் உள்ளது என்றால், வாதியிடமும், சரவணன் என்பவரிடமும் உள்ளது.

4. ஜெயராமனிடமிருந்து வாதிகள் மீதி நிலத்தை நேரடியாக கிரயம் வாங்கினார்களா என்றால், இல்லை. பச்சமுத்து நிலத்திற்கு கிழபுறத்தில் உள்ள நிலத்தை பச்சியாப்பிள்ளை என்பவர் ஜெயராமனிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால், ஒரு வயல் தள்ளி அடுத்தது. அந்த கிரய பத்திரத்தில் வளையமா தேவி பாதையிலிருந்து உள்ளே செல்லும் வண்டிப்பாதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், அந்த பத்திரத்தை நான் பார்த்ததில்லை. 04.04.1983-ல் ஜெயராமன் பச்சியாப்பிள்ளைக்கு விற்பனை செய்த பத்திரம் தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால், சரிதான்.

5. அந்த பத்திரத்தில் மாமூல் வழிநடை பாத்தியம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், வண்டிப்பாதை என்று குறிப்பிடப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. பச்சியாப்பிள்ளைக்கு எழுதிக் கொடுத்த நிலத்திற்கு பச்சமுத்துக்கு எழுதிக் கொடுத்த நிலத்தின் வழியாக வண்டிப்பாதை உரிமை இருப்பதாக எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால், ஆமாம். 09.09.1989-ல் வாதிகளின் தகப்பனரான ராமசாமிக்கு தான் 04.04.1983-ல் கிரயம் பெற்ற சொத்தை விற்பனை செய்துள்ளார் என்றால், ஆமாம்.

6. அவருடைய கிரய பத்திரத்தில் இல்லாத வண்டித்தட பாத்தியத்தை அவர் விற்பனை செய்த 09.09.1989 பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால், ஆமாம். பச்சியாப்பிள்ளைக்கு இல்லாத உரிமையை அவர் ராமசாமிக்கு பத்திரம் எழுதிக் கொடுக்கும் போது எழுதிகொடுத்துள்ளார் என்றால், ஜெயராமன் தங்கவேலுவிற்கு மகன் பச்சமுத்துவிற்கு விற்கும்போதே வண்டித்தடம் குறித்து எழுதிக் கொடுத்துள்ளார். ஜெயராமனும், பச்சமுத்து மட்டும அந்த வண்டித்தடம் குறித்து எழுதிக் கொண்டார்கள் என்றால், ஆமாம்.

7. ஜெயராமன் அந்த பத்திரத்தில் வண்டிப்பாதைக்காக நிலத்தை வைத்துக் கொண்டு மீதி நிலத்தை விற்பனை செய்தார் என்றால், ஆமாம். 13 செண்ட்டை வைத்து கொண்டு மீதி நிலத்தை விற்பனை செய்தார். யாருடைய பத்திரத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், தங்கவேல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ-1 ல் தங்கவேல் வாங்கிய பத்திரத்தில் அவ்வாறு வாசகம் எதுவும் இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

8. நானும் வாதிகள் இருவரும் உறவினர்கள் என்றால், ஆமாம். ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். 1989-ல் விற்பனை செய்துவிட்ட பிறகு 20 வருடங்கள் கழித்து 07.01.2009-ல் வாதிகள் பச்சியாப்பிள்ளையிடம் தடபாத்திய கிரயம் ஒன்றை எழுதி வாங்கியுள்ளார்கள் என்றால், ஆமாம். அந்த பத்திரத்தில் தவறாக 7 ½ செண்ட் என்று குறிப்பிட்டு அதில் 3 ல் 1 பங்கு பாதை பாத்தியம் என்று குறிப்பிட்டு 20 ஆண்டுகள் கழித்து பத்திரம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது.

9. வாதிகளின் ஆவணங்களில் பாதை எவ்வளவு அடி நீளம், அகலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. பாதைக்கு வடபுறத்தில் யாருடைய நிலம் உள்ளது என்றால், ஆறுமுகம் மற்றும் வரதராஜ் நிலம் உள்ளது. தென்புறம் பிரதிவாதிகளின் நிலம் கொஞ்சம் உள்ளே தள்ளி உள்ளது. பச்சமுத்து தன்னுடைய நிலத்தில் கொஞ்சுமு இடம் விட்டு பாதையை அகலப்படுத்தினார்கள். வடபுறம் நிலத்துக்காரர்கள் இடம் விட்டார்களா என்றால், இல்லை.

10. எனது பிரமாண வாக்குமூலத்தில் 5-ஆம் பத்தியில் மேற்படி தாவா வண்டிப்பாதையை அகலப்படுத்தப்பட்டு இருபுற நில உரிமையாளர்களும் இன்றுவரை மேற்படி வண்டிப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர் என்று கூறியுள்ளேன் என்றாலும், தற்போது வடக்கில் உள்ள தோட்டத்துக்காரர்கள் விடவில்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல, அவ்வாறு நான் கூறியிருப்பது தவறு என்றால், ஆமாம்.

11. எந்த வருடத்திலிருந்து அந்த பாதையை அகலப்படுத்தினார்கள் என்றால், 1984. 2009-ல் வழக்கு தாக்கல் செய்தபிறகு நீதிமனற் ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் வண்டிப்பாதை 10 அடி அகலத்தில் இருப்பதாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும், அதனால்

1984-லேயே பாதை அகலப்படுத்திவிட்டார்கள் என்று நான் கூறுவது தவறு என்றால், சரியல்ல. வாதிகள் எனது உறவினர்கள் என்பதாலும், பாதையை பற்றி எனக்கு தெரியாது என்றாலும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

12. வாதிகள் எனது உறவினர்கள் அல்ல. வாதிகளால் புல வரைபடம் தாவா நிலுவையிலிருக்கும் போது உருவாக்கப்பட்ட ஆவணம் என்றால், சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன் 07.01.2009 தேதியன்று தான் தட பாத்திய கிரய ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது என்றால், அது பற்றி தெரியாது. வாதிகளுக்கு அவர்களது வீட்டிற்கு தென்புறத்திலும், வடபுறத்திலும் தான் பாதை வசதி உள்ளது என்றும், ஒருநாளும் பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாக பாதை உபயோகப்படுத்தியது இல்லை என்றால், சரியல்ல.

13. பிரதிவாதிகள் நிலத்தில் உள்ள பாதை அவர்களுக்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. மோசடியான பல ஆவணங்களை வாதிகள் தயாரித்து அதற்கு ஆதரவாக நானும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பச்சியாப்பிள்ளை, சரவணன் ஆகியோருக்கு விற்பனை செய்த ஜெயராமனே வண்டிப்பாதை உரிமை எழுதிக் கொடுக்காததால் வாதிகளுக்கும் வண்டிப்பாதை உரிமை இல்லை என்றால், சரியல்ல.

14. எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் தாவா வண்டிப்பாதையில் லாரி, டிராக்டர் போன்ற கனரக வாகனங்கள் போவதாக நான் கூறியிருப்பதே தவறு என்றால், போய் கொண்டிருந்ததை நிறுத்திவிட்டார்கள். 2007 லேயே நிறுத்திவிட்டார்கள். அதன் பிறகுதான் வழக்கு போட்டார்கள். வாதிகளின் வாகனம் ஒரு போதும் வண்டித்தடத்தில் செல்லவில்லை என்றால், சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

**வாதி தரப்பு மறு விசாரணை** ஜெயராமன் விற்ற 2.51 ஏக் நிலம் தான் ரோட்டை ஒட்டி அமைந்துள்ள நிலங்கள். மற்ற நிலங்கள் கிழபுறத்தில் உள்ள நிலங்கள் என்றாலும், அந்த பாதை நிலங்கள் இல்லை என்றால் மற்ற நிலங்களுக்கு செல்லவே முடியாது என்றால், ஆமாம்.

**பிரதிவாதிகள் தரப்பு மறு குறுக்கு விசாரணை** வா.சா.ஆ.1ல் வழக்கு நடக்கும் பாதை வடபுறத்தில் உள்ளது என்றால், ஆமாம். வா.சா.ஆ.1ல் தென்புறம் ஓரமாக கிழமேல் செல்லும்

வண்டிப்பாதையில் நீயும், நானும், ராமலிங்கப்பிள்ளையும், ஆட்கள், கால்நடைகள் போக வர தட பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வடபுறத்தில் உள்ள பாதை தான் பிரச்சனை.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பு மறு விசாரணை இல்லை.

Ending Time: 01.59 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**